ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,590 — 1958 නොවැම්බර් 21 වැනි සිකුරාද — 21.11.1958

11,590 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

### 1939 ம் ஆண்டின் 61 ம் இலக்க நகரச் சங்கங்கள் சட்டம்

1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ந் திகதி முதல் உள்ளூராட்சி உதவி அதிகாரி திரு. பீ. கே. திசநாயகா வெலிகமை நகரின் காரியங்களைப் பரிபாலிக்கும் விசேஷ அதிகாரியாக இருப்பாரென்று இத்தால் பொது ஜனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஹூ நவம்பர்மீ 13 ந் வ.

---

## உபவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரவாகு வடக்குப் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான உபவிதி.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஹூ நவம்பர்மீ 11 ந் வ.

**தீங்கான, அபாயமான வியாபாரங்கள் பற்றிய உபவிதிகள்**

1. கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(1) கருவாடு சேகரித்து வைத்தல்.
(2) மொத்த வியாபாரத்தின் பொருட்டு அழுகிக்கெடும் உணவுப் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(3) பசளை அல்லது செயற்கை உரம் செய்தல்.
(4) விளாகிரி செய்தல்.
(5) சவர்க்காரம் செய்தல்.
(6) தோல் பதனிடுஞ்சாலை வைத்தல்.
(7) பாக்கு பாடம்பண்ணல்.
(8) கழிவு இறைச்சி அல்லது இரத்தம் அவித்தல்.
(9) தோல் சேகரித்து வைத்தல்.
(10) எலும்பு சேகரித்து வைத்தல்.
(11) மீனுக்கு "ஐஸ்" போடுதல்.
(12) பலகை பாடம் பண்ணல்.
(13) "ஷீட்" அல்லது "கிரேப்" ரப்பர் புகையூட்டுதல் அல்லது செய்தல்.
(14) மூன்று மூடைகளுக்கதிகமாக செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் செய்தற்கு உபயோகமாகும் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(15) சோடா செய்தல்.
(16) புகையிலை பாடம் பண்ணல் அல்லது உலர்த்தல்.
(17) சுருட்டுகள் அல்லது சிகரட்டுகள் செய்தல்.
(18) பாணி காய்ச்சுதல்.
(19) கள் சேர்க்கும் நிலையம் வைத்தல்.
(20) பீடி சுற்றுதல்.

2. கீழ்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(1) கபூக்கல், சரளைக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல்.
(2) கொப்பரா செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(3) வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(4) தேங்காய்த் துருவல் செய்தல்.
(5) மின்னரம் பாடம்பண்ணல் அல்லது சேகரித்து வைத்தல்.
(6) குழிவெட்டி முதிரைக்கல் தோண்டுதல்.
(7) இயந்திரத்தினால் தேங்காயெண்ணெய் வடித்தல்.
(8) செக்கினால் தேங்காயெண்ணெய் வடித்தல்.
(9) புல்லெண்ணெ வடித்தல்.
(10) கறுவாத் தைலம் வடித்தல்.
(11) தும்பு செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(12) பருத்திப் பஞ்சு சேகரித்து வைத்தல்.
(13) வெட்டுமரக் கடை வைத்தல்.
(14) மண்ணெண்ணெய்க்கடை வைத்தல்.
(15) ஆபரணம் செய்தல்.
(16) கொல்லுலை வைத்தல்.
(17) அச்சகம் வைத்தல்.
(18) தேயிலைத் தொழிற்சாலை வைத்தல்.
(19) பிராணவாயு உபயோகிக்கும் கொல்லுலை வைத்தல்.
(20) நெற்குற்றும் ஆலை வைத்தல்.

3. கீழ்காணும் வியாபாரங்கள் அபாயமான, தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(1) தும்புக்குச் சாயமேற்றுதல்.
(2) செங்கல் அல்லது ஓடுகள் செய்தல்.
(3) மின்குளங்களில் மின்சக்தி ஏற்றுதல்.
(4) சுண்ணாம்பு சுடுதல், சேகரித்து வைத்தல், பாடம்பண்ணல் அல்லது தகர்த்தல்.

---

L.G.D—GD. 9/73 A

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்து புலோலி கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதி.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஹூ நவம்பர்மீ 12 ந் வ.

**உபவிதி**

யாழ்ப்பாணம் மாவட்டத்துக் கிராமச் சங்கங்கள் சிலவற்றால் ஆக்கப்பட்டு, 1940 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் திகதி வெளியான 8,697 ம் இலக்க "கசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள், புலோலி கிராமப் பகுதி சம்பந்தப்பட்டவரை, அவற்றின் அட்டவணைக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய அட்டவணையை வைத்து, இத்தால் திருத்தப்படுகின்றன :—

" அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வாகனம் ஒவ்வொன்றுக்கும் .. | பு. கி. ச. வா. |
| இரட்டை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | பு. கி. ச. இ. |
| ஒற்றை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | பு. கி. ச. ஒ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. | பு. கி. ச. றி. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | பு. கி. ச. கை. |
| துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் .. | பு. கி. ச. து." |

## நாஞுவித அறிவித்தல்

### மூதூர் கிராமச் சங்கம்

**இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவிப்பு**

இறைச்சிக்காரர்பற்றிய சட்டம் 44—1947 ன் 7 ம் பிரிவின் பிரகாரம் பின்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காணப்படுவோரிடமிருந்து 1959 ம் ஆண்டிற்கு இறைச்சி விற்பனைக்கான உத்தரவுப்பத்திரம் கோரும் விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

ஆகையால் மூதூர் கிராமச் சங்க இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் கீழ்குறிப்பிடப்பட்டோருக்கு உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படுவதை மறுக்க விரும்பினுல் மறுப்பிற்கான காரணங்களை 14 நாட்களுள் இணைப்பிரதிகளாய் எனக்கு அனுப்பி வைக்குமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

| விண்ணப்பகாரரின் பெயர் | வியாபாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| மு. அ. இப்ருமிசா .. | மாட்டிறைச்சிக்கடை .. | 9 ம் வட்டாரம், மூதூர். |
| மு. சுல்தான் .. | ஆட்டிறைச்சிக்கடை .. | 9 ம் வட்டாரம், மூதூர். |

மூதூர்,
1958 ம் ஆடு நவம்பர்மீ 14 ந் உ.

அக்கிராசனர்,
மூதூர் கிராமச் சங்கம்.

---

## விளம்பரம்

1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப் படுகின்றது.

பேர்ஞர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1958 ம் ஆடு கார்த்திகை (நவம்பர்) மீ 11 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.